# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதைக்குரிய சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு திட்டத்துக்கான முதல் கொடுப்பனவு வழங்கல்</u>**

மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதைக்குரிய நவீன சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு முறைமையை பொருத்துவதற்கான முதலாவது கொடுப்பனவான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை (770 மில்லியன் இலங்கை ரூபா) இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த நிதி வழங்கப்பட்டமையானது இந்தியா இலங்கை இடையிலான ரயில்வே துறை சார்ந்த ஒத்துழைப்பில் மற்றொரு மைல்கல்லாக கருதப்படுகிறது.

2. இந்தத் திட்டமானது 2025 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த உயர் மட்ட விஜயத்தின் போது இந்திய பிரதமர் மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோரால் கூட்டாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் 14.89 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனுதவி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவிருந்த இந்தத் திட்டமானது, 2024 டிசம்பர் மாதம் இலங்கை ஜனாதிபதி அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்தினால் நன்கொடை உதவி திட்டமாக மாற்றப்பட்டது. தற்போது இந்தத் திட்டம் இந்திய பொதுத்துறை நிறுவனமான இர்கோன் சர்வதேச வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஊடாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

3. இந்திய உதவியின் கீழ் வடக்கு ரயில் பாதையானது மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீட்டர் வேகம் வரை செல்லக்கூடிய வகையில் தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் நவீன சமிக்கை தொகுதி பொருத்தப்படவுள்ளதுடன் இதன் மூலமாக பயணிகளின் பாதுகாப்பு மேம்படுத்தப்படும் அதேசமயம் ரயில் சேவைகள் அதிகரிக்கப்பட்டு வினைத்திறனுடனான சேவைகள் மேம்படுத்தப்படும். ஒவ்வொரு ரயில் நிலைய பிரிவுகளுக்குள்ளும் நிகழ் நேரத்தில் ரயில்களின் நிலையினை கண்டறிதல், நவீன மயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து ஒட்டுமொத்த வலையமைப்பினையும் கண்காணிக்கப்படுவதை உறுதி செய்தல், ஒவ்வொரு ரயில் நிலையங்களிலும் சமநேர வருகை மற்றும் புறப்பாடுகளை ஒழுங்கமைத்தல், நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையில் செயல்படுத்துதல் மற்றும் தாமதங்களை குறைத்தல் போன்ற வசதிகளை இந்த முறைமை வழங்குகின்றது. இந்த திட்டத்தின் முதற்கட்ட செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தொடரும் நிலையில் 2026 ஆகஸ்ட் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. இந்தியா இலங்கை இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்பாடுகளில் ரயில்வேக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் குறிப்பாக ரயில் பாதை புனரமைப்பு, ரயில் பெட்டிகள் விநியோகம் மற்றும் சமிக்கை முறைமைகள் பொருத்துதல் உள்ளிட்ட

பல்வேறு திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கியுள்ளது. இதுவரை இந்தியா அண்ணளவாக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் வரையில் இலங்கை ரயில்வே துறைக்காக நிதி உதவியினை வழங்கியுள்ளது. இதுவரையில் இந்தியாவால் 500 கிலோமீட்டர் ரயில்வே பாதை புனரமைக்கப்பட்டும் நிர்மாணிக்கப்பட்டும் உள்ளன. அதே நேரம் வடக்கு முதல் தெற்குவரையிலான சீரான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்குடன் 400 கிலோமீட்டர் வரையில் சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு பொறிமுறை கட்டமைப்புகள் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக ரயில் இயந்திரங்கள், டீசலில் இயங்கும் ரயில்கள் மற்றும் பிரதான இயந்திரங்கள் போன்றவை இலங்கை ரயில்வே கட்டமைப்பின் திறனை விருத்தி செய்யும் வகையில் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளன.

5. இலங்கையில் தொடர்புகளையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் கொண்டிருக்கும் வலுவான உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் இத்திட்டங்கள் மக்களை இலக்காகக் கொண்ட இந்திய அபிவிருத்தி பங்குடைமையின் அணுகுமுறையினை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

******

**கொழும்பு,**
**31 ஜூலை 2025**